# BENEVOLENT IAS ACADEMY

1626A, Sri Vinayaga Complex, Avinashi Road, Hope College,
Peelamedu (PO), Coimbatore – 641004.
Cell: +91-9787731607/9787701067.
Web: www.benevolentacademy.com E-Mail:benevolentacademy@gmail.com

# DAILY IMPORTANT CURRENT AFFAIRS

## TNPSC Group I, II/IIA & IV

DATE: 04.04.2025

### 1) மூக்கையா தேவருக்கு மணிமண்டபம்




- ✓ மூக்கையா தேவர் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் தலைவராக இருந்தவர். இவர் பிறந்த தினம் - ஏப்ரல் 4 (103 வது பிறந்த தினம்).
- ✓ இவர் முத்துராமலிங்க தேவரின் நம்பிக்கையை பெற்று பார்வார்டு பிளாக் கட்சியில் இணைந்தார்.
- ✓ 1952-1977 - ஆறுமுறை சட்டப்பேரவை உறுப்பினராக இருந்தவர்.
- ✓ "நியாயத்துக்கு ஒரு மூக்கையா" என்று **அண்ணா** இவரை சிறப்பித்துள்ளார்.
- ✓ **மூக்கையா தேவருக்கான மணிமண்டபம் உசிலம்பட்டியில் அமைய உள்ளது.**

### 2) சென்னையில் கார்ல் மார்க்ஸ்க்கு சிலை




**கார்ல் மார்க்ஸ்:**

- ✓ பொதுவுடமை தத்துவத்தின் பிதாமகன்.
- ✓ "உலகத் தொழிலாளர்களே ஒன்று கூடுங்கள்" என்று பிரகடனப்படுத்தியவர்.
- ✓ நூறு ஆண்டுகளுக்கு முன் சென்னையில் முதல் முறை தொழிற்சங்க இயக்கம் ஆரம்பித்ததின் நினைவாய் சென்னையில் கார்ல் மார்க்ஸுக்கு சிலை வைக்கப்படுகிறது.
- ✓ இது சட்டப்பேரவையில் விதி 110 இன் கீழ் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது.

## 3) பால் உற்பத்தியைப் பெருக்க விருது

- ✓ பால் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வொரு ஒன்றியத்திலும் அதிக பால் தரும் **மூன்று கறவை மாடுகளுக்கு** விருது வழங்கப்படும் - பால்வளத்துறை அமைச்சர் ஆர் எஸ் ராஜ கண்ணப்பன்.

## 4) நடந்தாய் வாழி காவிரி திட்டம்

- ✓ **காவிரி மற்றும் அதன் ஐந்து துணை ஆறுகளை சுத்தப்படுத்த** நமது அரசு அறிவித்துள்ள திட்டம்.
- ✓ மதிப்பீடு ரூ.934 கோடி (மத்திய அரசு 60% & மாநில அரசு 40%)

## 5) புளியங்குடி எலுமிச்சம் பழம் புவிசார் குறியீடு

- ✓ தென்காசி மாவட்டம் - புளியங்குடி எலுமிச்சம் பழத்துக்கு புவிசார் குறியீடு கிடைத்துள்ளது.
- ✓ இங்குள்ள எலுமிச்சம்பழத்தின் சிறப்பு **சிட்ரிக் அமிலத்தின் சதவீதம் அதிகமாக** இருப்பதே ஆகும் - மத்திய வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் பியூஷ் கோயல்.




## 6) ஸ்ரீஹரிகோட்டாவில் 3-வது ஏவு தளம்

- ✓ ஆந்திரா - ஸ்ரீஹரிகோட்டாவில் இஸ்ரோவின் மூன்றாவது ஏவுதளம் அமையப்பட உள்ளது.
- ✓ இது 90 மீட்டர் உயரமும் அதிகபட்சமாக 1000 டன் எடையும் கொண்ட ராக்கெட்டுகளை ஏவும் திறன் கொண்டது.
- ✓ மதிப்பீடு ரூ 3984.86 கோடி

## 7) இந்தியா - தாய்லாந்து இடையே 5 ஒப்பந்தங்கள்

- ✓ டிஜிட்டல் தொழில்நுட்பத்துறை ஒத்துழைப்பு
- ✓ குஜராத்தின் லோத்தலில் உள்ள **தேசிய கடல்சார் பாரம்பரிய வளாக மேம்பாடு**
- ✓ சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் துறை ஒத்துழைப்பு
- ✓ கைவினைப் பொருட்கள், கைத்தறி மேம்பாடு

- ✓ இரு நாடுகளின் இடையிலான வெளியுறவு அமைச்சகங்கள் இடையிலான ஒப்பந்தம்.

  **கலாச்சார பிணைப்பு**: 18-ஆம் நூற்றாண்டின் ராமாயண சுவர் ஓவியங்களின் அடிப்படையில் சிறப்பு தபால்தலை வெளியிட்டது தாய்லாந்து.

8) **4G தொலைத் தொடர்பு தொழில்நுட்ப உபகரணம் உருவாக்கம்**
   - ✓ 4G தொலைத் தொடர்பு தொழில்நுட்ப உபகரணம் உருவாக்கம் - இந்தியா ஐந்தாவது இடம்
   - ✓ முதல் 4 இடங்கள்: பின்லாந்து, ஸ்வீடன், சீனா & தென்கொரியா

   இந்தியாவில் அமெரிக்க தொழிலதிபர் **எலான் மஸ்கின் ஸ்டார்லிங்க் (Star Link)** இணைய சேவை வழங்க உள்நாடு நிறுவனங்கள் ஒப்பந்தம்.

